1886 மே 13] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈஈ) அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''1986ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 35/1986)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''.

இந்தச் சமயத்தில் சட்ட முன்வடிவு பற்றி நான் சிறிது கூற விரும்புகிறேன். இந்த மாநிலத்தில் இயங்கி வரும் உதவி பெறும் தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கும், பிற ஊழியர்களுக்கும் உரிய பணிப்பாதுகாப்பு வழங்கவும் அப்பள்ளிகளின் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தும் பொருட்டும் தமிழ்நாடுஅங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் முறைப்படுத்துதல் சட்டம், 1973 இயற்றப்பட்டு 1—12—74 முதல் இந்த மாநிலத்தில் செயல்படுத்தப் பட்டுள்ளது. மாநில சட்டப் பிரிவு 26-ன் கீழ் கல்வி அல்லது பயிற்றுவிப்பு முறை அல்லது பிற விஷயம் ஆகியவற்றின் தொடர்பாக அரசால் இயற்றப்பட்ட அரசாணை ஒன்றின் விளைவாக தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களையோ, அல்லது பிற ஊழியர்களையோ ஆட்குறைப்பு செய்ய நேரிட்டால் அந்த ஆசிரியர்களையும், பிற ஊழியர்களையும் வேறொரு தனியார் பள்ளியிலோ அல்லது அரசு பள்ளியிலோ தேவைக்கேற்ப பணியில் அமர்த்த வகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் ஒரு தனியார் பள்ளியில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவதன் காரணமாக ஆட்குறைப்பு செய்யப்படும் ஆசிரியர்களோ அல்லது வேறு ஊழியர்களோ, வேறு ஒரு தனியார் பள்ளியிலோ அல்லது அரசு பள்ளியிலோ மீண்டும் பணி புரிவதற்கு திட்டவட்டமான வழி வகைகள் இல்லை. எனவே ஒரு தனியார் பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவதன் விளைவாக ஆட் குறைப்புக்கு உட்படும் ஆசிரியர்களோ பிற ஊழியர்களோ வேறு ஒரு தனியார் பள்ளியிலோ அல்லது அரசு பள்ளியிலோ மீண்டும் வேலை ஏற்பதற்கு மேற்படி சட்டத்தின் மூலம் வகை செய்யப்பட வேண்டும் எனவும், அப்படிப்பட்ட முறையில் அச்சட்ட பிரிவு 26, உரியபடி திருத்தப்

* 1986-ஆம் ஆண்டு மே 8ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பட வேண்டும் எனவும் அரசு கருதி, அதற்காக இச்சட்ட முன் வடிவு மாற்றப்பட்டுள்ளது.

அது மூலச் சட்டம் அமல் செய்யப்பட்ட நாளான 1-12-1974 முதற்கொண்டே அமல் செய்யப்படுவதற்கும் வகை செய்யப் பட்டுள்ளது. இச்சட்ட முன் வடிவை இப்போது ஆய்வுக்கு எடுத் துக் கொள்ளும்படியும் பின்பு நிறைவேற்றித் தரும்படியும் இந்த அவைக்கு பரிந்துரைக்கிறேன். இந்த ஒரே ஒரு பாதுகாப்பிற் காகத்தான் இந்தச் சட்ட முன் வடிவை நாம் கொண்டு வரு கிறோம். தனியார் பள்ளிகளிலே மாணவர்கள் குறைவதன் காரணமாக வேலை நீக்கம் செய்யப்படுகின்ற ஆசிரியர்களுக்கு வேறு ஒரு தனியார் பள்ளியிலோ அல்லது அரசு பள்ளியிலோ வேலை தர வேண்டும். அப்படி இப்போது வாய்ப்பில்லை. அப்படி வாய்ப்பு தருவதற்காக இந்தத் திருத்தம் கொண்டு வரு கிறோம். வேறு பல பிரச்னைகள் அந்த தனியார் பள்ளிகள் சம் பந்தப்பட்டவை இருக்கின்றன. அவைகளுக்காக ஒரு குழு போட்டு, அந்தக் குழு சில பரிந்துரைகளையும் செய்திருக்கி றார்கள். ஒரு வழக்கு வேறு சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிறது. அது முடிந்ததற்குப்பிறகு வேறு அந்தப் பிரச்னைகளைப் பற்றி நாம் சட்டமுன் வடிவைக் கொண்டு வர இருக்கிறோம். இப்போது அவையின் முன்னாலே கொண்டு வந்திருக்கிற இந்தத் திருத்தம் ஒரே ஒரு சிறிய பிரச்னை தான். சிறிய பிரச்னை என்றாலும், வேலை இழக்கின்ற ஆசிரியர்களுக்கு பணி பாதுகாப்பு தருகின்ற பிரச்னை. முக்கியப் பிரச்னை. 1974-லே யிருந்து அதை அமல் படுத்துவதற்கும் நாம் வகை செய்திருக்கிறோம். ஆகவே அதை ஆதரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் எ.எஸ்.ஏ. ஆறுமுகம் அவர்கள் எப்போது எதிர்க்கட்சித் தலைவராக மாறி னார்? அவர் ஜனதா கட்சியிலிருந்து விலகி இந்திரா காங்கிர ஸுக்கு எப்போது போனார்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே ஒன்றும் பாயிண்ட் ஆப் ஆர்ட்டர் இல்லை. உட்காருங்கள்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். இதே முறையில் டிசிப்ளின் இந்த அவையிலே கொண்டு வருவது நல்லது. அமைச்சர்கள் அமர்ந்திருக்கக்கூடிய முன் வரிசையில் சில நேரங்களில் ஆளும் கட்சியைச் சார்ந்த டிரஷரி பென்ச் நண்பர்கள் வந்து உட்காருகிறபோது, இப்படியே அந்த உறுப்பினர் அமைச்சராகி விட்டாரா என்று கேட்பதற்கு எங்களையும் விட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே ஒன்றும் பிரச்னை இல்லை. அமைச்சர்களுடன் வந்து உட்காருவதால் அவர்களும் அமைச்சராவதில்லை. இவரும் எதிர்க்கட்சித் தலைவராகவில்லை

1986 மே 13 [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத்தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். இந்தச் சட்டத்தை அமல் படுத்தக் கூடிய நேரத்தில், இப்படி ஏற்படலாம் என்று உத்தேசித்து அப்போது ஆசிரியர்களிடத்திலே ஏற்படக் கூடிய சில கருத்துக்களை இங்கே சொல்வதற்கு நான் இந்த வாய்ப்பை பயன்படுத்திகொள்ள விரும்புகிறேன். அதாவது தனியார் பள்ளிக்கூடங்களிலே, சில இடங்களில் மேனேஜ்மெண்ட் கமிட்டி என்றோ அல்லது ஸ்கூல் கமிட்டி என்ற பெயராலோ சில கமிட்டிகளை அமைத்து, அந்த ஸ்கூலைச் சார்ந்தவர்கள் நடத்தி வருகிறார்கள். அந்த இடங்களிலே என்ன நடக்கிறது என்றால் நியாயமாக ஆசிரியர்களுக்கு எந்த அளவுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமோ அது கொடுக்கப்படாமல் வேறு சில ஆட்களை அந்தக் கமிட்டியிலே அதிகமாகப் போட்டு, அந்தக் கமிட்டி ஆட்களுக்கு வேண்டாத ஆசிரியர்களை பழி வாங்குவதற்கு உரிய வகையில் அவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மாணவர்களைப் பள்ளிக்கூடத்திலே சேர்க்காமல், அதாவது அட்மிஷன் அதிகமாகச் செய்யாமல் விட்டு வைத்து, ஆசிரியர்களை வெளியிலே அனுப்பக் கூடிய ஒரு ஏற்பாட்டை கடைப்பிடிக்கிறார்கள்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய விளக்கத்திலே சொல்லப்பட்டிருப்பது, அதாவது மாணவர்களின் விகிதாசாரப்படி டீச்சர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் வெளியேற்றப்பட வேண்டிய நிலை ஏற்படக்கூடிய நேரத்தில்

''....consequent on the reduction in the strength of the pupil studying in any such school may also be appointed in any school or institution maintained by the Government or in such private school, as the case may be....''.

என்று ரிடக்ஷன் இன் தி ஸ்டெங்ரெத் ஆப் தி பியப்பில் என்ற நிலையிலே சில மேனேஜ்மெண்டுகள் செய்து வருகின்றன. அதை எப்படி சரிப்படுத்த வேண்டுமோ, அல்லது தடுத்து நிறுத்தப்பட வேண்டுமோ அப்படிப்பட்ட நடவடிக்கைகளை அரசு எடுத்தால் தான், இந்தச் சட்டத்தினுடைய உண்மையான நோக்கம் நிறை வேற்றப்பட முடியும் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-40.)

அதேபோல இன்னொரு பிரச்னை என்னவென்றால், பல ஸ்கூல்களைப் பொறுத்தவரையில் மைனாரிட்டி ஸ்கூல்ஸ் என்ற

பெயரை வைத்துக்கொண்டு, அவர்கள் அரசாங்கத்தின் ஆணைகளை இன்றைக்கு மதிக்காமல், அவைகளுக்கு கட்டுப்படாமல் இருக்கிறார்கள். அவற்றை அமல்படுத்துவதற்கு மறுக்கிறார்கள். இன்றைக்கு பல இடங்களில் மைனாரிட்டி ஸ்கூல்சில் உள்ள டீச்சர்ஸ் பொறுத்தவரையில் அவர்கள் மீது நடவடிக்கையெடுக்கப்பட்டு வெளியே தள்ளப்படுகிற போது, அரசாங்கம் அந்த ஆசிரியர்களுக்கு எந்த விதமான பாதுகாப்பும் கொடுக்கமுடியாத துரதிர்ஷ்டவசமான நிலை ஏற்பட்டிருக்கிறது. மைனாரிட்டி ஸ்கூல்ஸ் என்ற பெயரைச் சொல்லி, இந்த நிர்வாகம் எடுத்துக்கொள்கிற நடவடிக்கைகளில் எதிலும் அரசாங்கம் தலையிட்டு ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கமுடியாத நிலை ஏற்பட்டால் நிச்சயமாக இந்தச் சட்டத்தின் உண்மையான நோக்கம் நிறைவேறுமா என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

சென்ற கால அனுபவத்திலிருந்து பார்க்கலாம். மைனாரிட்டி ஸ்கூல்ஸ் என்ற பெயரால் கான்ஸ்டிடியூஷனில் இருக்கக்கூடிய மைனாரிட்டி ரைட்ஸ் எங்களுக்கு உண்டு என்று சொல்லி பல சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் அந்த மைனாரிட்டி ரைட்ஸ் கொண்டாடி இன்றைக்கு செயல் படுகிறார்கள். டீச்சர்ஸ் நியமனம் செய்கிற போது, 2 டீச்சர்களை நியமனம் பண்ண வேண்டிய இடத்தில் துட்டை வாங்கி 5 டீச்சர்களை நியமனம் செய்து, அந்த 3 பேர்கள் அப்பாயிண்ட்மென்ட் அப்ரூவல் ஆகாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு ஊதியமும் கிடையாது. இப்படிப்பட்ட நிலைமைகள் தனியார் பள்ளிக்கூடங்களில் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இப்படிப்பட்ட முறையில் தேவைக்கு அதிகமான ஆசிரியர்களை பணத்திற்காக நியமனம் செய்கிற அந்த முறையை தடுத்து நிறுத்துவதற்கு ஏற்பாட்டை நாம் செய்தால் தான், இப்படி சர்ப்ளஸ் டீச்சர்ஸ் என்று வரக்கூடியவர்களுக்கு இந்தச் சட்டத்தின் உண்மையான நோக்கத்தின் படி வேலை கொடுப்பதற்கான வாய்ப்பு ஏற்படும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், இன்றைக்கு பல இடங்களில், இங்கே குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல,

"Consepuent on tie reduction in he strength of the pupils studying in any snch private school...."

என்பதைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட தில்லுமுல்லுகள் எல்லாம் இன்றைக்கு பள்ளிகளில் இருந்து கொண்டிருக்கின்றது. தனியார் நிர்வாகம் எடுத்துக் கொள்கிற இந்த நடவடிக்கைகளை எல்லாம் அரசாங்கம் சுமக்கக்கூடிய நிலைக்கு சென்றுவிடக்கூடாது. இன்றைக்கு தனியார் பள்ளிக்கூடங்களில் நிர்வாகப் பொறுப்பில் இருக்கிற கமிட்டியைப் பொறுத்தவரையில், அதிலே நியாயமான முறையில் எந்தஅளவிற்கு வெளி இடங்களில் இருக்கிறார்களோ அவர்களுக்கு தகுந்த அளவில் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் பிரதிநிதித்துவம் கொடுக்கக்கூடிய முறையில் சட்ட திருத்தம் கொண்டு வர வேண்டும். அதேபோல தேவைக்கு

1986 மே 13] [திரு, ஜே. ஹேமச்சந்திரன்]

அதிகமான ஆசிரியர்களை நியமனம் செய்து இப்படிப்பட்ட பிரச்னைகள் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்தக் கூடிய முறையில் உள்ள சட்ட திருத்தத்தைக் கொண்டு வந்து அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டும். அந்த முறையில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தான் இந்தச் சட்டத்தின் உண்மையான நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு உதவிகரமாக இருக்குமென்று சுட்டிக்காட்டி, இந்தச் சட்டத்தை வரவேற்று அமர்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த சட்ட திருத்தம் ஆசிரியர்களுக்கு வேலை பாதுகாப்புக்காக இருப்பதால் ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறேன். இந்தத் திருத்தத்தில் 1974 ஆம் ஆண்டிலிருந்து சட்டம் அமலுக்கு வரவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதற்கான காரணம் எனக்கு தெரியவில்லை. திருத்தம் இன்று முதல் அமலானால் சரியாக இருக்கும். 11, 12 ஆண்டுகள் முன்னாலே அமலாக வேண்டுமென்றால் இதனால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு சம்பளம் எதுவும் கொடுப்பதற்காக இப்படி சட்டத்தைக் கொண்டு வருகிறீர்களா? இதுபற்றிய விவரம் அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். தனியார் பள்ளிகளில் வலைமை ஆசிரியருக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம் இப்போது அதிகமாக இருக்கிறது. இதுவே போதும். தனியார் பள்ளிகள் நன்கொடை மூலமாகவும், பகமை மூலமாகவும் நடத்தப்படுகிறது. ஆதலால் அவர்களுடைய நிர்வாகக் குழுவிற்கு கூடுதல் அதிகாரம் வேண்டும் எனக்கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன். இந்தச் சட்டம் 1974 ஆம் ஆண்டிலிருந்து அமலுக்கு வருமென்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஒருசில தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களை ரெட்ரென்ச் செய்து அரசாங்கப் பள்ளிகளில் சேர்ந்தார்கள். அவர்களை இதுவரையில் ரெகுலரைஸ் செய்யாமல் டெம்பரரியாகவே வைத்திருக்கிறார்கள். குறிப்பாக எங்களுடைய பகுதியில் ஆர்.சி.எஸ். என்ற ஹைஸ்கூலில் ஒருசில டீச்சர்களை ரெட்ரென்ச் செய்து அரசாங்கப் பள்ளிகளில் நியமனம் செய்தார்கள்.

அந்த ஆசிரியர்களுக்கு இது வரையில் இன்கிரிமென்ட் போடாமல் டெம்ப்ரரியாக அந்த நிலையில் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே இந்தச் சட்டத்தின் மூலமாக, அவர்களை எந்த நாளில் நியமனம் செய்தார்களோ, அன்றிலிருந்து இன்று வரையில் அவர்களுக்கு இன்கிரிமென்ட் போட்டுத் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இத்தகைய ஒரு பள்ளிக்கூடத்திலே இருந்து ஆசிரியர்களை வேறு பள்ளிக்கூடங்களுக்கு மாற்றினால் அவர்களை சில மேனேஜ்மெண்டுகள் எடுத்துக் கொள்ளாத நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது. குறிப்பாக கேட்டால் மைனாரிட்டி என்று சொல்கிறார்கள். நாம் அவர்களுக்கு ரெககனிசன் கொடுத்தற்குப் பின்னால், அதிகமாக ஆசிரியர்கள் வேலை செய்கிறார்கள், அந்த அளவிற்கு சம்பளம் இல்லை என்று சொல்கிறார்கள் நான் காலையிலே பேசும்போது கூட சொன்னேன். எனவே இத்தகைய நிலைமை இருப்பதாலே, அத்தகைய பள்ளிக்கூடங்களில் இருந்து, வேறு பள்ளிக்கூடங்களுக்கு ஆசிரியர்களை நியமனம் செய்தால், எடுத்துக் கொள்ளமாட்டார்கள். சில கல்லூரிகளில் கூட, சர்ப்ளஸ் ஸ்டாஃப் என்று இருந்த அவர்களை டிரான்ஸ்பர் செய்ய வேண்டும் என்று சொன்னால், பல மேனேஜ்மெண்டுகளில் எடுப்பதில்லை. அப்படி அவர்களை எடுக்காமல், அங்கே, இங்கே என்று போட்டு அவர்களை அலைக்கழிக்கின்ற நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது.

எனவே இந்தச் சட்டம் வரும்போது, மைனாரிட்டி, மெஜாரிட்டி என்று வேற்றுமை இல்லாமல், எந்தப் பள்ளிக்கூடத்திலே நியமனம் செய்ய சான்ஸ் தருகிறார்களோ, அங்கே அவர்கள் வேலை செய்ய வேண்டும்.

மேலும் இன்று சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், பல இடங்களில் டொனேசன் வாங்குகிறார்கள். நானே ஒரு ஸ்கூலுக்குச் சென்று, ஆறாம் கிளாசுக்கு ஒரு இடம் கேட்டபோது—முத்தையா செட்டியார் ஹையர் செகண்டரி ஸ்கூலில் சென்று கேட்டபோது—அனுமதி வழங்குகிறோம். 2 ஆயிரம், 3 ஆயிரம் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். உண்மையிலே ஒரு என். ஜி. ஓ.—வினுடைய மகளுக்கு இப்படிப்பட்ட வசதி இருக்குமா என்பதைப் பார்க்க வேண்டும். நான் இது என்ன எய்டட் ஸ்கூலா அல்லது அன்-எய்டெட் ஸ்கூலா என்று கேட்டதற்கு அவர்கள் எய்டட் ஸ்கூல்தான் என்று சொன்னார்கள். அப்படியானால் அரசாங்கத்தினுடைய பணத்தை வாங்கிக் கொண்டு, இப்படி நீங்கள் பணம் வாங்குகிறீர்களே என்று சொன்னால், எனக்குத் தெரியாது, நீங்கள் போய் கரஸ்பான்டென்டைப் பாருங்கள் என்று அங்கே இருக்கிறதலைமை ஆசிரியர் சொல்கிறார். சென்னை நகரத்தில், அமைச்சர்கள் அதிகமாக இருக்கின்ற இந்த இடத்திலே ஒரு ஏழைப் பெண்ணுக்கு இடம் கிடைக்கவில்லை என்றால், செல்ப்-பைனான்ஸ் இன்ஸ்டிடியூஷனிலே கிடைத்து விடுமா? முத்தையா செட்டியார் ஸ்கூல் என்று சொல்லக் கூடிய அந்தப் பள்ளிக் கூடத்திலேயே 2 ஆயிரம், 3 ஆயிரம் என்று வாங்குகிறார்கள். எனவே அரசாங்கம் அதை கண்காணிக்க வேண்டும். எனக்கு ஏற்பட்ட நேரிடையான அனுபவம் இது, அதனால் தான் சொல்கிறேன்.

மேலும் இந்த பிரியாரிட்டிசை மாற்ற வேண்டும். அதே போன்று சில பள்ளிக் கூடங்களில் ஸ்டாஃப் ஸ்ட்ரென்த், அதாவது அரசினுடைய முடிவை வேண்டுமென்றே திருத்திவிடக் கூடிய வகையில் பொறுப்பிலே உள்ளவர்கள் ஈடுபடுவார்கள். ஏன் என்றால், அவர்கள் எல்லாம் வாங்க வேண்டியதை வாங்கி விட்டார்கள். இனி மேல் வாங்குவதற்கு ஒன்றும் இல்லாத காரணத்தால், ஒரு ஆசிரியரைப் பழி வாங்க வேண்டும் என்று சொன்னால், சட்டத்திலே உள்ள ஓட்டைகளை வைத்துக் கொண்டு, தனியார் நிறுவனங்களில் உள்ளவர்கள் ஆசிரியர்களைப் பழி வாங்குவார்கள். எனவே இத்தகைய மோசமான மேனேஜ் மெண்டுகளில் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு அளிக்கக் கூடிய வகையில் சட்டங்களைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் பழி வாங்கப்படும் ஆசிரியர்கள், அதாவது தனியார் பள்ளிகளினுடைய நிர்வாகப் பணியிலே சொல்லப் போனால் உபரியாக உள்ள ஆசிரியர்களை வீட்டுக்கு அனுப்பும் போது, அரசு அவர்களை அரவணைத்து அவர்களுடைய வேலைக்கு உத்தரவாதம் வழங்குகின்ற இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். ஆனால் தனியார்கள் பள்ளிகளிலே ஒரு ஆசிரியர் வேலைக்கு அமர்த்தப் படுகிறார் என்று சொன்னால், அதே நேரத்திலே அரசாங்கப் பள்ளிகளிலே ஒரு ஆசிரியர் வேலைக்கு அமர்த்தப்படும் போது, அவர்களுக்கு எந்தவிதமான சலுகைகள் வழங்கப்படுகிறதோ, அவர்களுடைய வேலைக்கு எந்தவிதமான உத்தரவாதம் வழங்கப் படுகிறதோ, அதே உத்தரவாதம் தனியார் பள்ளிகளிலே வழங்கப்பட வேண்டும் என்பதையும், நான் எடுத்துரைக்க ஆசைப் படுகிறேன். தனியார் ஒருவர், ஒரு பள்ளியைத் துவக்கு கிறார் என்று சொன்னால், அந்த பள்ளியினுடைய மேம்பாட்டுக் காக உழைக்கக் கூடியவராக, அந்தப் பள்ளிக்கூடத்தினுடைய வளர்ச்சியிலே அக்கறை உடையவராக இருப்பவர்களைக் கண் காணித்து, அவர்களுக்குத்தான் அந்த உரிமங்கள் வழங்கப்பட வேண்டும். அப்படி வழங்குவதன் மூலமாக, அந்த மாதிரியான ஆசிரியர்களை உபரியாக உள்ள ஆசிரியர்களை வீட்டுக்கு அனுப் பக்கூடிய ஒரு நிலைமை ஏற்படாது. ஆகவே அவ்வாறு உரிமங் கள் வழங்கும்போது, இப்படிப்பட்ட தகுதி உள்ளவர்களுக்கு மட்டுமே, தனியார் பள்ளிக்கூடங்களை நடத்துவதற்கான உரி மங்களை வழங்க வேண்டும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து செயற்கையாக பற்றாக்குறையை ஏற்படுத்தி ஒரு தனியார் பள்ளிக்கூடத்தில் இருக்கின்ற நிர்வாகம், ஒரு ஆசிரியரை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று நினைத்தால், கண்டிப்பாக இந்த சூழ்நிலையில் வீட்டுக்கு அனுப்பக் கூடிய ஒரு நிலைமை

இருந்து வருகிறது. அதற்குக் காரணம் என்ன என்றால், செயற்கையாக ஒரு பற்றாக் குறையை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லி, சில தனியார் நிறுவனங்கள், ஒரு ஆசிரியரைப் பழி வாங்க வேண்டும் என்று நினைத்தால், எந்தத் துறையில் ஆசிரியர் ஒருவர் பணியாற்றுகிறாரோ, அந்தத் துறையில் மாணவர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்று சொல்லி, அவர்களைப் புறக்கணித்து, அந்த ஆசிரியரை வேண்டுமென்றே பழி வாங்க அந்தத் தனியார் பள்ளிக்கூடங்கள் நினைக்கலாம். ஆனால் இந்தச் சட்டம் அவர்களுக்கு உறு துணையாக இருக்கக் கூடாது என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

[பிற்பகல் 1-50]

அதோடுமட்டுமல்லாமல, அப்படி அந்த தனியார் பள்ளிகளிலே வேலை செய்கிற ஆசிரியர்களை வேறு பள்ளிக் கூடங்களுக்கு மாற்ற வேண்டுமென்று நினைத்தால் இந்தச் சட்டம் வழிவகை செய்யுமானால் அப்படி அவர்கள் மாற்றப்படும்போது அந்தத் தனியார் பள்ளிக்கூடங்களிலே இருக்கின்ற ஆசிரியர்களுடைய கருத்தை மட்டும் கேட்டு அறியக் கூடாது. அரசாங்கத்திலே, அரசாங்க அதிகாரிகளுடைய கருத்துக்களை கேட்டறிந்து அந்தக் கருத்துக்களுக்கு, இந்தத் தனியார் பள்ளிக்கூடங்கள் உண்மையிலேயே ஆட்குறைப்பு செய்ய வேண்டுமென்று அந்த அதிகாரிகள் நினைத்தார்களானால் அப்படிப்பட்டவர்கள் தான் வேறு பள்ளிக்கூடங்களுக்கு மாற்றப்பட வேண்டும். அதே நேரத்திலே, எந்த ஒரு ஆசிரியரும் வேறு பள்ளிக்கு மாற்றப்பட வேண்டுமென்று இந்த அதிகாரிகள் நினைக்கின்றார்களோ, அந்த ஆசிரியர்களுடைய கருத்தையும் நாம் கேட்டறிந்து அதற்குப் பின்னாலே மாற்றம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே, குருகுல மலையூர் உயர்நிலைப்பள்ளி என்று ஒரு தனியார் பள்ளிக்கூடம் இருந்தது. அந்தத் தனியார் பள்ளிக்கூடத்தை, அரசானது தன்னுடைய அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளியாக எடுத்துக் கொண்டது. அந்தப் பள்ளியிலே வேலை செய்த அத்தனை ஆசிரியர்களும் அதே பள்ளிக்கூடத்திலே ஆசிரியர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களுக்கு ஊதியமும் வழங்கப்பட்டு வருகிறது. இந்தச்சூழ்நிலையிலே அந்தப் பள்ளியினுடைய தலைமை ஆசிரியராக இருந்த ஒருவருக்கு மட்டும் அவர்களை தலைமையாசிரியராகக் கொடுக்காமல், தலைமையாசிரியருக்கு உரிய ஊதியம் கொடுக்கப்படுகிறதே தவிர அவர் தலைமையாசிரியராக அங்கே நிர்வகிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. இதற்கும் அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன், வணக்கம்,

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னரே குறிப்பிட்டதைப் போல, தனியார் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்குப் பல பிரச்சனைகள் இருக்கின்றன. அவற்றை அடிப்படையாக வைத்து இந்தச் சட்டத்திலே என்னென்ன திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டுமென்கிற விளக்கங்களை எல்லாம் ஆசிரிய பிரதிநிதிகளை நான் கேட்டு இருக்கிறேன். அந்த அடிப்படையிலே பல திருத்தங்களை நாம் கொண்டுவர வேண்டியிருக்கிறது. அதற்கிடையே உச்ச நீதி மன்றத்திலே வழக்கு ஒன்று இருக்கிறது. சில பிரிவுகள் செல்லாது என்று சொல்லிவிட்டார்கள். அந்த வழக்கு எடுக்கப்பட்டு அதனுடைய முடிவு தெரிந்ததற்குப் பிறகு அதற்கு ஏற்ப நாம் மற்ற திருத்தங்களைக் கொண்டுவரலாம் என்று இருக்கின்றோம். இப்போது கொண்டு வந்திருக்கிற திருத்தம், ஒரு தனியார் பள்ளியிலே மாணவர்கள் குறைந்து விட்டால் அதன் காரணமாக ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்யலாம். ஆனால் அவர்களுக்கு வேலை தர வேண்டுமென்று அரசு விரும்புகிறது. ஆனால் அந்தச் சட்டத்திலே அதற்கு வழி வகை இல்லை. இப்போது மாசிலாமணி முதலியார் அவர்கள் பள்ளியிலே இருந்து — 1975 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன் — 5 ஆசிரியர்கள் இப்படி வேலை இழக்க நேரிட்டதன் காரணமாக அவர்களுக்காக எழுந்த ஒரு நேர்விலே தான் இந்தத் திருத்தத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். இப்போது 1975-லே இருந்து வந்தவர்களை எல்லாம் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணத்தின் காரணமாகத் தான் 1974-லே இருந்து இந்தச் சட்டம் அமுலுக்கு வரும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் அவர்களுக்குச் செய்திருக்கிற உதவியை சட்டபூர்வமாக ஆக்குகின்ற வகையிலே இந்தத் திருத்தத்தை பின் தேதியிட்டு நாம் அமுலுக்கு கொண்டு வருகிறோம். ஆகவே இந்தத் திருத்தத்தை ஆதரித்து சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 35/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது. சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 1, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

[பேரவைத் தலைவர்] [1986 மே 13

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 35/1986) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

4. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஐ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு : இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும்.

பேரவை இன்று மாலையிலும் கூடும்.

14-5-1986 அன்று புதன்கிழமை காலை வினாக்கள்-விடைகள்; அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்த கவன ஈர்ப்பு மற்றும் அரசினர் சட்ட முன்வடிவுகளை அறிமுகம் செய்து முடித்த பின், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையை நீக்குவது குறித்த அரசினர் தீர்மானம் முன்மொழியப் பெற்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பெற்று முடிவுற்றபின் அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

பேரவை மாலையிலும் கூடும். 15—5—1986 வியாழக்கிழமை அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்து நிறைவேற்றப்படும்.

மற்றும் இதர அரசு அலுவல்கள் எவையேனும் இருப்பின் அவைகளும் எடுத்துக்கொள்ளப் பெற்றப் பின் பேரவையின் கூட்டம் அன்று முற்பகலுடன் முடிவு பெறும்.

பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4-30 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.